

Since 1951

# புகழ் மணக்கும் புரவலர்கள்

## நிறுவனர் நாள் விழா சிறப்பு மலர்



ஹாஜி. M. ஜமால் முகம்மது சாஹிப்



ஜனாப். N.M. காஜாமியான் இராவுத்தர்


வெளியீடு

**ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)**

ஆற்றல் வளத் தனித்தகுதி பெற்றது.

( தேசியத் தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் "A" தரச்சான்று பெற்றது )

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தோடு இணைவு பெற்ற கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 620 020

தமிழ்நாடு, இந்தியா.

11.07.2017

# புகழ் மணக்கும் புரவலர்கள்

# நிறுவனர் நாள் விழா
## சிறப்பு மலர்



ஹாஜி. M. ஜமால் முகம்மது சாஹிப்



ஜனாப். N.M. காஜாமியான் இராவுத்தர்

**விழா நாள் : 11.07.2017**

## ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)

ஆற்றல் வளத் தனித்தகுதி பெற்றது.

(தேசியத் தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் "A" தரச்சான்று பெற்றது)

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தோடு இணைவு பெற்ற கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 620 020

தமிழ்நாடு, இந்தியா.

ஜனாப் M.J. ஜமால் முஹம்மது பிலால் சாஹிப்
தலைவர்

Dr.A.K.காஜா நஜீமுதீன் சாஹிப், டிலிட். (USA)
செயலர் & தாளாளர்

ஹாஜி M.J. ஜமால் முஹம்மது சாஹிப்,
துணைச் செயலர்

ஹாஜி K.A. கலீல் அகமது சாஹிப்,
பொருளாளர்

முனைவர் S. இஸ்மாயில் முகைதீன்,
முதல்வர்

முனைவர் A. முகம்மது இப்ராஹீம்,
துணை முதல்வர்

முனைவர் M. முகம்மது சிஹாபுதீன்
கூடுதல் துணை முதல்வர்

முனைவர் K. அப்துஸ் சமது,
இயக்குநர், நிதியாளுநர் (தன்னிதிப் பிரிவு)

முனைவர். K.N. அப்துல் காதர் நிஹால்,
இயக்குநர், பதிவாளர், (வருகைப்பதிவு தன்னிதிப் பிரிவு)

முனைவர். K.N. முஹம்மது பாஜில்,
இயக்குநர், விடுதி நிர்வாகம்

பேரா. M.A. ஜமால் முஹம்மது யாசீன் ஜுபைர்
இயக்குநர், விடுதி நிர்வாகம்





## தென்னிந்தியாவின் வர்த்தக இளவரசர்
## ஹாஜி M. ஜமால் முஹம்மது சாஹிப்
**(1882 – 1949)**

**(நன்றி : சேயன் இப்ராஹீம், முதல் தலைமுறை மனிதர்கள்)**

“1929ஆம் ஆண்டில் எனது நண்பர் கனம் ம.ஜ.ஜமாலுதீன் சாஹிபும் நானும் டில்லி சென்றிருந்தோம். அங்கே ஜாமியா மில்லியாவின் அதிபரான Dr. ஜாகிர் ஹுஸைனின் விருந்தாளியாக ஜாமியாவில் தங்கியிருந்தோம். அவ்வமயம் ஜாமியாவின் ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் எங்களுக்கு நடத்தப்பட்ட உபசாரங்களும், விருந்துகளும் ஆனந்தம். இவ்வளவு உபசாரங்களுக்கும் காரணம் யாதென வினவிய போது “இந்த ஜாமியா மரணிக்கும் நிலையில் இருந்தபோது, சென்னை முன்வந்து இதற்குக் கைகொடுத்து புத்துயிர் உண்டாக்கியது. அச்சம்பவத்திற்குப் பின் சென்னையின் முதல் பிரதிநிதிகளாகிய உங்களுக்கு ஜாமியாவைச் சார்ந்தவர்கள் அவர்களது நன்றியையும் அன்பையும் இவ்வகையில் காட்டுகின்றனர்” என்று விடை பகர்ந்தார் Dr. ஜாகிர் ஹுஸைன்.

ஜாமியா மில்லியா மௌலானா முஹம்மது அலீ அவர்களால் ஆரம்பிக்கப் பெற்று ஹக்கீம் அஜ்மல்கான் அவர்களால் வளர்க்கப்பட்டு வந்தது. ஹக்கீம் ஜீயின் மரணத்திற்குப் பின்னர் அதன் நிலைமை கவலைக்கிடமாகி விட்டது. அப்போது டாக்டர் அன்ஸாரி, மௌலானா ஆசாத், Dr. ஜாகிர் ஹுஸைன் ஆகியோர் சென்னைக்கு வர ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் பெருந்-தொகை கொடுத்து ஏனையோரிடமும் பொருள் வசூலித்துக் கொடுத்தனுப்பினார். இதையே டாக்டர் ஜாகிர் ஹுஸைன் மேலே கண்டபடி குறிப்பிட்டார். “என் நினைவுகள்” என்ற தலைப்பில், காயிதேமில்லத் இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் எழுதிய கட்டுரையின் சில பகுதிகளே மேலே குறிப்பிடப்பட்டுள்ளன. (மணி விளக்கு மாத இதழ், ஜுன் 1983)

ஆம்! 1920-ஆம் ஆண்டு மௌலானா முஹம்மது அலீ அவர்களால் அலிகாரில் தொடங்கப்பட்ட ஜாமியா மில்லியா இஸ்லாமிய என்ற கல்விக்கூடம், 1925-இல் டில்லிக்கு மாற்றப்பட்டது. பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த இந்தக் கல்விக் கூடத்திற்கு நிதிஉதவி அளித்துப் புத்துயிர்

ஊட்டிடக் காரணமாக இருந்தவர்களில் ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் அவர்கள் முக்கியமானவர். அவர் வழங்கிய நன்கொடை எவ்வளவு தெரியுமா? ஒரு லட்சம் ரூபாய். அப்போது சென்னை மாகாணத்தின் ஆண்டு வருமானமே 17 கோடிகள் தான்.

இந்திய வர்த்தக சபையின் தலைவராக ஏழு ஆண்டுகளும் அகில இந்திய முஸ்லிம்லீக்கின் சென்னை மாகாணத் தலைவராக பத்து ஆண்டுகளும், தென்னிந்திய முஸ்லிம் கல்விச் சங்கத்தின் தலைவராக ஆறு ஆண்டுகளும் பொறுப்புகள் வகித்து திறம்படப் பணியாற்றிய தென்னிந்தியாவின் வர்த்தக இளவரசர் எனப் போற்றப்பட்ட ஜனாப் ஜமால் முஹம்மது சாஹிப் அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் சில துளிகளைப் பதிவு செய்வதை ஒரு வரலாற்றுக் கடமையாகவும் எனக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பாகவும் கருதுகிறேன்.

ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் அவர்களின் தந்தையார் ஹாஜி ஜமால் முகையதீன் சாஹிபும் மிகப் பெரும் வணிகரே. சென்னை ஜார்ஜ்டவுண் தம்புச் செட்டித் தெருவில் "ஜமால் முகையதீன் அன்கோ" என்ற மிகப் பெரிய வணிக நிறுவனத்தின் நிறுவனர். அந்த நிறுவனம் ஆட்டுத் தோல்களைப் பதனிட்டு, பதனிடப்பட்ட தோல்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தது. காயிதேமில்லத் இந்த நிறுவனத்தின் பங்குதாரராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தென்னிந்தியாவின் மிகப் பெரிய தோல் ஏற்றுமதி நிறுவனமாக அப்போது இது விளங்கியது.

ஹாஜி ஜமால் முகையதீன் சாஹிபின் பூர்வீகம் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகா நரிக்குடிக்கு அருகிலுள்ள வேம்பக்குடி கிராமமாகும். நரிக்குடியில் ஐந்தாவது வகுப்புவரை கல்வி கற்ற அவர் தனது 15-ஆவது வயதில் பிழைப்புத்தேடி சென்னைக்கு வந்து தோல் ஏற்றுமதி வணிகத்தில் ஈடுபட்டிருந்த தனது தாய்மாமா முத்து வீரா இராவுத்தரிடம் வேலைக்குச் சேர்ந்தார். சில ஆண்டுகள் அங்கு பணியாற்றிய அவர், பின்னர் சொந்தமாக தோல் வணிகத்தில் ஈடுபட்டார். சில ஆண்டுகளுக்குள்ளாகவே வணிகத்தில் உச்ச நிலை அடைந்தார். 1914-18ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் கோடீஸ்வரர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.



1898ஆம் ஆண்டு சென்னை நகரில் மதரஸா ஜமாலியா என்ற அரபிக் கல்லூரியை தொடங்கினார். சென்னையில் தொடங்கப்பட்ட முதல் அரபி மதரஸா இது என்பது குறிப்பிடத் தக்கது. இதற்கு பெரும் அளவிலான தனது சொத்துக்களை வக்ப் செய்தார். மதரஸாவிற்கு எதிரில் ஒரு பள்ளிக் கூடத்தையும் நிறுவினார். இவை தவிர, திண்டுக்கல், ஆடுதுறை ஆகிய ஊர்களில் செயல்பட்டு வந்த அரபி மதரஸாக்களுக்கும் தாராளமாக நிதி உதவி வழங்கினார்.

இத்தகைய சீலமிகு வணிகச் செம்மலின் மூத்த புதல்வரே ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் அவர்கள். 1882ஆம் ஆண்டு பிறந்த இவர், முதலில் முத்தியாலுப் பேட்டை உயர் நிலைப்பள்ளியிலும், பின்னர் கிறிஸ்டியன் கல்லூரி உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்றார். பின்னர் தனது தந்தையாருக்கு உதவியாக அவர் நடத்தி வந்த வணிகத் தொழிலில் ஈடுபட்டார். தனது தந்தையாருடன் இணைந்தும் அவரது இறப்பிற்குப் பின்னர்(1924) சுயமாகவும், வணிகம் நடத்தி பெரும் புகழடைந்தார்.

1910ஆம் ஆண்டு, வணிக நிமித்தமாக ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இவர் அங்குள்ள பல கல்வி நிலைகளுக்கும் சென்று பார்வையிட்டார். ஆங்கிலக்கல்வியும், உலகக்கல்வியும் கற்பதன் மூலமே முஸ்லிம்கள் முன்னேற்றமடைய முடியும் என உறுதியாக எண்ணிய அவர், நாடு திரும்பியதும் மதரஸா ஜமாலியாவிற்கு புத்துணர்வு ஊட்டும் முயற்சிகளில் ஈடுபட்டார்.

அம்மதரஸாவில் மார்க்கக் கல்வியுடன், ஆங்கிலக் கல்வியையும், பொதுக் கல்வியையும் அறிமுகப்படுத்தினார். இதற்கு அரசிடமிருந்து நிதி உதவி கிடைக்காத காரணத்தால், செலவுகளைத் தானே ஏற்றுக் கொண்டார். வட இந்திய முஸ்லிம் தலைவர்களான மௌலானா அபுல்கலாம் ஆஸாத், டாக்டர் அன்ஸாரி, ஹக்கீம் அஜ்மல் கான் ஆகியோர் சென்னை வந்தால் மதரஸா ஜமாலியாவில் தான் தங்குவது வழக்கம். ஜாமியா மில்லியா இஸ்லாமியாவுக்குப் புத்துயிரும், புது வாழ்வும் அளித்த அவர், அலிகார் பல்கலைக் கழகம், தேவ்பந்த் மதரஸா, திபியா கல்லூரி (டில்லி) நத்வத்துல் உலூம் (லக்னோ) ஆகிய கல்வி நிறுவனங்களுக்கும் நிதி உதவி செய்துள்ளார்.

ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிபின் வர்த்தக நிறுவனம் இஸ்லாமிய சமய பரப்புரைக்காகப் பெருந்தொகையினை செலவு செய்தது. இஸ்லாத்தின் கொள்கைகளின் பால் ஈர்க்கப்பட்டு முஸ்லிமாக மாறிய இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த முஹம்மது மர்மடியூக் பிக்தால் என்பவரைச் சென்னைக்கு அழைத்து வந்து இஸ்லாத்தைப் பற்றி ஆங்கிலத்தில் பல சொற்பொழிவுகளை நிகழ்த்த ஏற்பாடு செய்தது. பின்னர் அவரது சொற்பொழிவுகளை நூலாகத்தொகுத்து இஸ்லாமிய கலாச்சாரம் (Cultural cide of Islam) என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டது. தலை சிறந்த கவிஞரான அல்லாமா இக்பால் அவர்களையும் சென்னைக்கு வரவழைத்து இஸ்லாமியத் தத்துவங்கள் குறித்த சிந்தனையைத் தூண்டும் பல சொற்பொழிவுகளை அவர் நிகழ்த்த ஏற்பாடு செய்தது.

அவரின் சொற்பொழிவுகளைத் தொகுத்து 'இஸ்லாமிய மார்க்கச் சிந்தனைகளின் புனரமைப்பு' (Reconstrution of Religious thoughts in Islam) என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டது. அன்றையக் கால கட்டத்தில் வட இந்தியாவில் புகழ் பெற்று விளங்கிய மார்க்க அறிஞர்களான மௌலானா அப்துல் ஹலீம் சித்தீகி, மௌலானா ஷப்பீர் அஹ்மது உஸ்மானி, மௌலானா செய்யது சுலைமான் நத்வி போன்ற அறிஞர்களை ஆண்டிற்கு ஒருமுறை ஒருவர் என்ற வகையில் சென்னைக்கு வரவழைத்து திருவல்லிக்கேணி பெரிய பள்ளிவாசலில் முன்புள்ள திறந்த வெளி மைதானத்தில் தொடர்ந்து மூன்று நாள்கள் மார்க்கப் பரப்புரை செய்ய வைத்த சிறப்பும் இந்த நிறுவனத்திற்கு உண்டு. இத்தகைய சீர்மிகு நடவடிக்கைகளுக்குப்பின்னனியில் இருந்து செயல் பட்டவர் ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப். தனது வியாபாரத்தில் கிடைத்த இலாபத்தின் 17 சதவிகிதத்தை கல்விக்கும், இன்னொரு 17 சதவிகிதத்தை 'அல் ஜன்னத் தீனியா டிரஸ்ட்' மூலம் அறப்பணிகளுக்கும் வாரி வழங்கினார்.

1924ஆம் ஆண்டு தந்தையாரின் மறைவிற்குப் பின், வர்த்தக நிறுவனத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப், அதன் மேம்பாட்டிற்காகப் பெரிதும் பாடுபட்டார். 1926ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தின் வணிகம் உச்சநிலையை அடைந்தது. அப்போது இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஆட்டுத் தோல்களின் ஐம்பது சதவிகிதம் இந்த நிறுவனத்தால் ஏற்றுமதி செய்யப்பட்டது



குறிப்பிடத்தக்கது. தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய வணிகராக அவர் விளங்கினார். காந்திஜியின் நெருங்கிய நண்பரும், தொழிலதிபருமான ஜி.டி.பிர்லாவிற்கு இணையாகப் பேசப்பட்டார்.

வணிகத்தில் இவர் பெற்றிருந்த உன்னத நிலை. காரணமாக அகில இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவராக 1931ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். (Federation of Indian chamber of commerce and industry-FICCI) அப்பொறுப்பில் சுமார் ஏழாண்டுகள் அதாவது 1938ஆம் ஆண்டு வரை இருந்தார். இந்த அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் முஸ்லிம் இவரே. இவருக்குப் பின்னர் இந்தப் பொறுப்பிற்கு இதுவரை வேறு எந்த ஒரு முஸ்லிம் வணிகரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் சிறந்த பொருளாதார நிபுணராகவும் திகழ்ந்தார். 1927-இல் இங்கிலாந்து மந்திரி சபையில் இந்தியாவிற்கான நிதி அமைச்சராக இருந்த சர் பேசில் பிளக்கெட் இங்கிலாந்து பௌன்ஸீக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பினை குறைத்து உத்தரவிட்டார். இதனால் இந்தியப் பொருளாதாரம் பெரும் சீர்குலைவைச் சந்திக்க நேரிடும் என்று பொருளாதார வல்லுநர்களும் வணிகர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் இங்கிலாந்து அரசின் இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அறிவுப்பூர்வமான விவாதங்கள் ஏற்பட வழி வகுத்தார். இவரது பொருளாதார நிபுணத்துவத்தை உணர்ந்த சென்னைப் பல்கலைக்கழகம், அதன் எக்னாமிக்ஸ் அண்டு காமர்ஸ் போர்டு ஆப் ஸ்டடீஸ் (Economics and commerce board of studies) இன் கௌரவ அங்கத்தினராக இவரை நியமித்துக் கௌரவப்படுத்தியது.

1931ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் இந்திய வர்த்தகர் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் வணிகர்களின் பிரதிநிதியாக ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் இம்மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தார். இம்மாநாட்டில் கலந்து கொண்ட இன்னொரு வணிகப் பிரமுகர் ஜி.டி.பிர்லா. முதலாவது வட்ட மேஜை மாநாட்டைப் புறக்கணித்திருந்த மகாத்மா காந்தியும் இம் மாநாட்டில் கலந்து கொண்டார்.

இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டிற்கு ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் சென்ற போது அவருக்குச் சென்னையில் மிகச் சிறந்த அளவில் வழியனுப்பு விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி அவர்கள் "காந்திஜியை விட ஜமால் முஹம்மது சாஹிபே அபாயகரமானவர் என ஆங்கிலேயர்கள் நினைக்கின்றனர். ஏனெனில் ஆங்கிலேய அரசு இந்தியா சம்பந்தமாக கடைப்பிடித்து வரும் பொருளாதாரக் கொள்கையால் இந்தியாவிற்கு ஏற்படும் ஆபத்தை உடனே கண்டு பிடித்து அதற்கு எதிராகக் குரல் கொடுப்பார் என்று அஞ்சியே காந்திஜியை அழைத்த பின்னரும் இவரை அழைக்கத் தயங்கினர்" என்று குறிப்பிட்டார்.

வட்டமேஜை மாநாட்டில் உரையாற்றிய ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப், இந்தியா அனைத்துத் துறைகளிலும் மிகவும் பின்தங்கியிருப்பதை புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டி இவை முன்னேற்றமடைய இங்கிலாந்து அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார். வரி விதிப்பில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்றும், இராணுவத்திற்கு மிக அதிக அளவில் நிதி ஒதுக்குவது தேவையற்றது என்றும், விவசாயத்திற்கும் தொழில் துறைக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். இவரது உரை மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரின் பாராட்டுகளையும் பெற்றது.

1931ஆம் ஆண்டு வட்ட மேஜை மாநாட்டிற்குச் சென்றிருந்த ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிபை லண்டனிலுள்ள ரிட்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்த ஆகாகானைச் சந்திக்க அழைத்துச் சென்றார் மகாத்மா காந்திஜி. இந்து முஸ்லிம் ஒற்றுமை பற்றி நீங்களும் ஜமால் முஹம்மதும் என்ன முடிவு செய்தாலும் அது எனக்குச் சம்மதமே என்று குறிப்பிட்டார். ஜமால் முஹம்மது சாஹிபின்பால் மகாத்மா காந்திஜி கொண்டிருந்த அளப்பரிய நம்பிக்கையை இந்தச் சம்பவம் பறைசாற்ற வல்லது. காந்திஜி தவிர, மோதிலால் நேரு, இராஜாஜி, சத்தியமூர்த்தி ஆகிய தலைவர்களுடனும் அவர் நெருங்கிய உறவு கொண்டிருந்தார்.

மிகப் பெரிய வணிகராகவும், சமுதாயப் பணிகளுக்கு வாரி வாரி வழங்கிய வள்ளலாகவும் திகழ்ந்த ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் அரசியல் நடவடிக்கைகளிலும் தீவிரப் பங்கு பெற்றிருந்தார். அகில இந்திய முஸ்லிம் லீக்(1906) தொடங்கப்பட்ட



காலத்திலிருந்தே ஜனாப் ஜமால் முஹம்மது சாஹிப் அந்த இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப ஆண்டுகளில் (1930வரை) காங்கிரசும் முஸ்லிம்லீக்கும் இணைந்தே பல்வேறு போராட்டங்களை நடத்தின. பல முஸ்லிம் தலைவர்கள் காங்கிரசிலும், முஸ்லிம் லீக்கிலும் இரட்டை உறுப்பினர்களாக இருந்தனர் என்பதும், அது அப்போது அனுமதிக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதில் துருக்கி கிலாபத்தைப் பாதுகாக்க நடத்தப்பட்ட கிலாபத் இயக்கம் முக்கியமானது. இப் போராட்டத்தில் ஜனாப் ஜமால் முஹம்மது சாஹிபும் கலந்து கொண்டார்.

1920-க்குப் பிறகு 1933 வரை, தமிழகத்தின் பல இடங்களில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மோதல்கள் ஏற்பட்டன. (சேலம், உத்தமபாளையம், வேலூர், உதையேந்திரம் (வடஆற்காடு மாவட்டம்) சென்னை, திருச்சிராப்பள்ளி, கமுதி ஆகிய ஊர்களில்) இந்த மதக்கலவரங்களை முடிவுக்கு கொண்டு வந்து மக்களிடையே அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த உருவாக்கப்பட்ட சமாதானக் குழுக்களில் ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டார். கல்வியின்மையே மதக்கலவரங்களுக்குக் காரணம் என அவர் உறுதியாக நம்பினார். எனவே முஸ்லிம்கள் கல்வியில் நாட்டம் கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

1930ஆம் ஆண்டு கிலாபத் இயக்கமும், ஒத்துழையாமை இயக்கமும் உச்ச கட்டத்தில் இருந்தபோது, நிதி திரட்டுவதற்காக சென்னை வந்த காந்திஜியும், அலி சகோதரர்களும் ஜனாப் ஜமால் முஹம்மது சாஹிபைச் சந்தித்தனர். அப்போது ஜமால் முஹம்மது சாஹிப் காந்திஜியிடம் வெற்று காசோலை (Blank Cheque) கொடுத்து நீங்கள் எவ்வளவு தொகையை வேண்டுமானாலும் அதில் எழுதிக் கொள்ளுங்கள் என்று கூறினார். வியப்படைந்த காந்திஜி, எனது நண்பர் ஜி.டி.பிர்லா கூட வெற்றுச் செக்கைத் தரவில்லையே நீங்கள் தான் தந்துள்ளீர்கள் என்று குறிப்பிட்டு, செக்கில் ஒரு லட்சம் எனத் தொகையை எழுதிக் கொண்டார்.

காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் முனைப்புடன் கலந்து கொண்ட ஜமால் முஹம்மது சாஹிப், அக்கட்சியின் மற்றொரு போராட்டமான வெளிநாட்டுத் துணிகள் புறக்கணிப்பில்" ஆர்வம் காட்டவில்லை. "அந்நியத் துணி புறக்கணிப்பு" என்பது

இங்கிலாந்தில் உற்பத்தி செய்யபட்ட துணிகள் புறக்கணிப்பு என்ற அளவோடு நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கருதினார். ஏனெனில் அன்றைய காலகட்டத்தில் சென்னை நகரிலும் மாகாணத்தின் பிற ஊர்களிலும் நூற்றுக்கணக்கான சிறு, பெரு முஸ்லிம் துணி வணிகர்கள் இருந்தனர். காங்கிரஸின் "வெளிநாட்டுத் துணிகள் புறக்கணிப்புப் போராட்டம்" முஸ்லிம் "வணிகர்களின் தொழிலைப் பாதித்து அவர்களின் வாழ்வாதாரங்களைச் சீர்குலைக்கும்" என அவர் கருதியே அந்தப் போராட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

இந்தச் சூழ்நிலையில் 1930ஆம் ஆண்டு அகில இந்திய முஸ்லிம் லீக்கின் சென்னை மாகாண அமைப்பாளராக ஜமால் முஹம்மது சாஹிப் நியமிக்கப்பட்டார். அன்றைய சென்னை மாகாணம் என்பது இன்றைய தமிழ்நாடு, திருவாங்கூர் சமஸ்தானம் தவிர்த்த கேரளா, ஹைதராபாத் சமஸ்தானம் தவிர்த்த ஆந்திரா, கர்நாடகாவின் சில பகுதிகள் ஆகியவற்றைக் கொண்ட மிகப் பெரிய மாநிலமாக இருந்தது. அவர் தலைமையில் நியமிக்கப்பட்ட அமைப்புக்குழு மாகாணமெங்கும் முஸ்லிம் லீக்கின் கிளைகளை ஏற்படுத்தி புதிய உறுப்பினர்களைச் சேர்த்து அதனை ஒரு பலமிக்க கட்சியாக உருவாக்கியது.

மிண்டோ மார்லின் பரிந்துரைகளின்படி 1909ஆம் ஆண்டிலிருந்து முஸ்லிம்களுக்கு மாகாண சட்டசபைகளில் தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. தனித் தொகுதி என்பது முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்த தொகுதிகளைக் கண்டறிந்து அதனை முஸ்லிம்களுக்கு ஒதுக்குவது. இந்தத் தனித்தொகுதிகளில் முஸ்லிம்கள் மட்டுமே போட்டியிட முடியும். முஸ்லிம்கள் மட்டுமே வாக்களிக்க முடியும். இந்தத் தனித்தொகுதி முறையை காங்கிரஸ் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்தது. இது இந்து முஸ்லிம் ஒற்றுமையைப் பாதித்து முஸ்லிம்களைத் தேசிய நீரோட்டத்திலிருந்து தனிமைப்படுத்திவிடும் என்பது அக்கட்சியின் வாதமாகும். மாகாண முஸ்லிம் லீக்கின் தலைவராக இருந்த போதிலும் ஜமால் முஹம்மது சாஹிப் தனிப்பட்ட முறையில் காங்கிரஸின் இந்த நிலைப்பாட்டை ஆதரித்தார். தனித் தொகுதி முறை வேண்டாம், கூட்டுத் தொகுதிகளே வேண்டும் என்பதுதான் அவரது கருத்தாக இருந்தது.



1937ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சட்டசபைத் தேர்தல்களில் முதன் முறையாக முஸ்லிம் லீக் தனது கட்சியின் அதிகாரப்பூர்வமான வேட்பாளர்களைத் தனித் தொகுதிகளில் போட்டியிட வைத்தது. 482 முஸ்லிம் தனித் தொகுதிகளில் போட்டியிட்ட அக்கட்சியின் வேட்பாளர்கள் 460 தொகுதிகளில் வெற்றி பெற்றனர். சென்னை மாகாணத்தின் தமிழ்ப் பகுதிகளில் போட்டியிட்ட ஆறு தொகுதிகளையும் முஸ்லிம்லீக் கைப்பற்றியது. ஆனால் வாய்ப்புக்கேடாக இந்தத் தேர்தலில் போட்டியிட்ட ஜமால் முஹம்மது சாஹிப் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

தனிப்பட்ட முறையில் முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதிகள் தேவையில்லை என்று கருதிய அவர், சென்னையில் முஸ்லிம்களுக்கு என ஒதுக்கப்பட்டிருந்த தனித் தொகுதியில் போட்டியிடாமல்,சென்னை வர்த்தகர் தொகுதியில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து சுயேட்சை வேட்பாளராக டி.டி.கிருஷ்ணமாச்சாரி (பின்னாளில் நேரு அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்தவர்) போட்டியிட்டு வெற்றி பெற்றார். காங்கிரசும், முஸ்லிம் லீக்கிலிருந்து பிரிந்து சென்ற மேல் விஷாரம் சி.அப்துல் ஹக்கீம் சாஹிபின் தலைமையிலான முற்போக்கு முஸ்லிம்லீக்கும் டி.டி.கிருஷ்ணமாச்சாரிக்கு மறைமுக ஆதரவு தெரிவித்தன.

இந்திய வர்த்தகர் சபைத் தலைவராகவும், மதிக்கத்தக்க அரசியல் தலைவராகவும் விளங்கிய அவர் தோல்வியுற்றது முஸ்லிம்களிடையேயும், பிற மக்களிடையேயும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நிகழ்ச்சி ஒரு முஸ்லிம், முஸ்லிமல்லாதவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் ஒரு தொகுதியிலிருந்து அவர் எத்தனை செல்வாக்குப் பெற்றவராக இருந்தாலும் வெற்றி பெற இயலாது என்ற எண்ணத்தை முஸ்லிம்களிடையே தோற்றுவித்தது. இது, முஸ்லிம்களை மேலும் மேலும் முஸ்லிம் அடையாளம் சார்ந்த அரசியலுக்கு இட்டுச் சென்றதாக வரலாற்று ஆய்வாளர் **J.P.P.** மோரே குறிப்பிடுகிறார்.

1937-ஆம் ஆண்டு நடைபெற்ற இத்தேர்தலில் நீதிக் கட்சி தோற்கடிக்கப்பட்டு சுயேட்சைகள் ஆதரவுடன் காங்கிரஸ் ஆட்சி அமைத்தது. இராஜாஜி பிரதம அமைச்சரானார். (அப்போது முதலமைச்சர் என்ற சொற்றொடர் வழக்கத்தில் இல்லை) ஆட்சிக்கு வந்தவுடன், இராஜாஜி பொது நிகழ்ச்சிகளிலும், பள்ளிக் கூடங்களிலும் "வந்தே மாதரம்" பாடல் கட்டாயம் பாடப்பட

வேண்டும் என்று ஆணையிட்டார். சட்டமன்றக் கூட்டத் தொடரின் முதல் கூட்டமே வந்தே மாதரம் பாடலுடன் தான் தொடங்கியது. இந்தப் பாடலுக்கு முஸ்லிம்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இப்பாடலில் உள்ள வரிகள் முஸ்லிம்களின் ஓரிறைக் கொள்கைகளுக்கு எதிரானது என்றும், வந்தே மாதரத்தைப் பாடுவது ஷிர்க் என்றும் முஸ்லிம்கள் கருதி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். மாகாண முஸ்லிம்லீக், இராஜாஜியின் இந்த ஆணையை எதிர்த்து நாடெங்கிலும் கிளர்ச்சியில் ஈடுபட்டது. மாகாணத் தலைவர் என்ற முறையில் ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் இப்போராட்டத்தை முன்னின்று நடத்தினார். இறுதியில் இராஜாஜி பணிந்தார். 1-3-1938 முதல் வந்தே மாதரம் பாடுவதை நிறுத்தி ஆணை பிறப்பித்தார்.

இதே கால கட்டத்தில் இராஜாஜி பள்ளிக் கூடங்களில் இந்தி மொழி படிப்பதைக் கட்டாயமாக்கி ஆணை பிறப்பித்தார். இதற்கு தமிழ் நாடெங்கும் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. பெரியார் தலைமையிலான திராவிடர் இந்தித் திணிப்பை எதிர்த்துப் பெரும் போரட்டத்தில், ஈடுபட்டது. மாகாணமெங்கும் போரட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்றன. முஸ்லிம் லீக் தலைவர்கள் பலரும் பெரியாருடன் இணைந்து இந்தி எதிர்ப்புப் போரட்டத்தில் பங்கு கொண்டனர்.

1937-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் திருச்சி தனித் தொகுதியிலிருந்து முஸ்லிம் லீக் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட கான் பகதூர் கலிபுல்லாஹ் சாஹிப் பெரியாருடன் இணைந்து இப்போரட்டங்களில் பங்கு கொண்டார். (பின்னாட்களில் இவர் தீவிர அரசியலிலிருந்து விலகி புதுக்கோட்டை மன்னரின் திவானாகப் பணிபுரிந்து பல புரட்சிகரமான நடவடிக்கைகளை அந்த சமஸ்தானத்தில் மேற்கொண்டார்.) எனினும் இந்த இந்தி எதிர்ப்புப் போரட்டத்தில் மாகாண முஸ்லிம்லீக்கின் தலைவரான ஜமால் முஹம்மது சாஹிப் கலந்து கொள்ளமால் ஒதுங்கியே இருந்தார். முஸ்லிம் லீக்கில் இருந்த உருதுவைத் தாய்மொழியாகக் கொண்ட தலைவர்களும் இப்போரட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை. உருதுவும், ஹிந்தியும் இணைந்த இந்துஸ்தாணி மொழியே இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டுமென்று ஜமால் முஹம்மது சாஹிப் விரும்பினார். இந்தி எதிர்ப்புப் போராட்டம் முஸ்லிம் நலன் சார்ந்த போராட்டமல்ல என்பது அவரது கருத்தாக இருந்தது.



உடல் நிலை காராணமாகவும், வணிகத்தில் ஏற்பட்ட இழப்பு காரணமாகவும், தீவிர அரசியலிலிருந்து ஓய்வு பெற எண்ணிய அவர், 1940 ஆம் ஆண்டு மாகாண முஸ்லிம் லீக் தலைவர் பதவியிலிருந்து விலகினார். பின்னர் திண்டுக்கல் சென்ற அவர் தனது ஆயுளின் இறுதி நாள்கள் வரை அங்கேயே குடியிருந்தார். உடல் நலிவு காராணமாக 7-11-1949 அன்று மரணமடைந்தார்.

பெரும் பொருட்செல்வம் பெற்றிருந்த அவர் மக்கட் செல்வமும் நிரம்பவே பெற்றிருந்தார். அவருக்கு ஐந்து மனைவியர்கள். குழந்தைகள் 16 பேர். இதில் ஆண்மக்கள் 10, பெண்மக்கள் 6. இவரது மூத்த மகனார் ஜனாப் எம்.ஜே.ஜமால் முகையதீன் சாஹிப் வணிகத்தில் ஈடுபட்டு வந்ததோடு அரசியலிலும் முக்கியப் பங்கு வகித்தார். தனது தந்தையாரைப் போலவே ஜனாப் காயிதே ஆஜம் ஜின்னா தலைமையிலான அகில இந்திய முஸ்லிம் லீக்கில் இணைந்து தீவிரமாகப் பணியாற்றினார். 1914ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12, 13, 14, 15 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற காயிதே ஆஜம் ஜின்னா சாஹிப் கலந்து கொண்ட மாபெரும் மு.லீக் மாநாட்டின் தொண்டர் படையின் தலைவராக இவர் சிறப்புடன் பணியாற்றி அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றார். நாட்டு விடுதலைக்குப் பின்னரும் இவர் தொடர்ந்து அரசியல் பணிகளிலும் அறப் பணிகளிலும் ஈடுபட்டு வந்தார்.

தனது வாழ்நாளின் இறுதிக் காலத்தின் போது திருச்சியில் கல்லூரி ஒன்றைத் தொடக்க விரும்பிய ஜமால் முஹம்மது சாஹிப் அங்குள்ள பெரும் வணிகர் N.M. காஜாமியான் இராவுத்தரிடம் நிலத்தைப் பெற்று கட்டிடம் கட்டிட பெரும் தொகையினைத் தனது மூத்த புதல்வரான M.J. ஜமால் முகையதீனிடம் வழங்கினார். தந்தையாரின் விருப்பத்தினை தனயன் நிறைவேற்றினார். 1951ஆம் ஆண்டு திருச்சியில் ஜமால் முஹம்மது கல்லூரி உருவானது. அக்கல்லூரியின் முதல் தாளாளராக ஜனாப்M.J. ஜமால் முகையதீன் பொறுப்பேற்று அக்கல்லூரி வளர்ச்சியடைய பெரும் முயற்சிகள் மேற்கொண்டார். தனது கம்பெனியின் மூலம் ரூ.2,75,000 கல்லூரியின் கட்டிடப் பணிகளுக்கு வழங்கினார்.

திருச்சி, ஜமால் முகமது கல்லூரியின் வளர்ச்சிக்காக நிறுவனர் செயலர் ஜனாப் ஜமால் முகைதீன் முன்னாள் எம்.பி. அவர்கள் 1953-ம் வருடம் ஏப்ரல் மாதம் மலேசியா, பர்மா, சைஹுன்

ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். அப்போது சென்னை புதுக்கல்லூரிக்காக அதன் செயலர் ஜனாப் அப்துல் மஜீது அவர்களும், கண்ணியமிக்க காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களும் உடன் வருவதாகக் கேட்டார்கள். அதற்கு ஜமால் முகைதீன் கூறினார்கள். "எங்களின் ஜமாலியா அரபிக் கல்லூரி, சென்னையில் பயின்ற மாணவர்கள் ஜமால் முகமது கல்லூரிக்குத்தான் நிதியுதவி செய்வதாகக் கூறியிருக்கிறார்கள்". ஜனாப் காயிதே மில்லத் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வசூலாகும் நன்கொடையில் 75% சதவீதம் ஜமால் முகமது கல்லூரிக்கும் 25% சதவீதம் புதுக்கல்லூரிக்கும் பிரித்து வழங்குவதாக முடிவு செய்து பயணம் மேற்கொண்டார்கள். பிறகு ஒரே மாதத்தில் காயிதே மில்லத் அவர்களும், அப்துல் மஜீத் அவர்களும் தாயகம் திரும்பி வந்து விட்டார்கள். ஜமால் முகைதீன் அவர்கள் மட்டும் ஒரு வருடங்களுக்கு அம்மூன்று நாடுகளிலும் தங்கியிருந்து நன்கொடை வசூல் செய்து தாயகம் திரும்பினார்கள். மீண்டும் காயிதே மில்லத் ஜமால் முகைதீனிடம் புதுக்கல்லூரிக்கு கூடுதல் தொகை தருமாறு வேண்டினார்கள். ஏனெனில் புதுக்கல்லூரியைத் தொடங்கிய மியாசிபின் உதவித் தலைவராகவும், நிறுவன உறுப்பினராக ஜமால் முகைதீன் அவர்கள் செயல்பட்டார்கள். ஆகவே மேலும் கூடுதலாக 5% சதவீதம் தொகையை உயர்த்தி 30% சதவீதம் நன்கொடை வழங்க இசைவளித்தார்கள். மீதமுள்ள 70% சதவீதம் தொகையை ஜமால் முகமது கல்லூரிக்குச் செலவிட தீர்மானித்து அதன் மூலமாக தற்போது கல்லூரியில் இயங்கி வரும் காஜாமியான் விடுதி கட்டப்பட்டது. அதனை 1955-ஆம் வருடம் அடிக்கல் நட்டு அப்போதைய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திருமிகு. லட்சுமணசாமி முதலியார் அவர்களால் 1960-ம் வருடம் அவ்விடுதி திறந்து வைக்கப்பட்டது.

மதரஸா ஜமாலியாவை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டார். ஒரு வணிகர் என்ற முறையில் தனது பணிகளைத் தொய்வின்றிச் செய்து வந்தார். இவரது முயற்சிகள் காரணமாகவே சென்னையில் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (Central Leather Institute) தொடங்கப்பட்டது. 1959 முதல் 1966 வரை தோல் ஏற்றுமதி கவுன்சிலின் (Leather Export Promotion Council) தலைவராகவும் இவர் பணியாற்றினார்.



நாடு விடுதலை பெற்ற சில ஆண்டுகளுக்குப் பிறகு இவர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1957ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1962 முதல் 1968 வரை அக்கட்சியின் இராஜ்ய சபை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அரும் பணியாற்றினார். இவரது இரண்டாவது மகனார் ஹாஜி M.J.M.அப்துல் கபூர் சாஹிப் தற்போது ஜமால் முஹம்மது கல்லூரியின் தாளாளராகப் பணியாற்றினார். தற்போது இவரது சகோதரர் ஜமாலுத்தீன் சாஹிப் அவர்களின் மகனார் M.J.நூருத்தீன் சாஹிப் கல்லூரியின் தலைவராகப் பொறுப்பேற்று திறம்பட செயல் பட்டு வருகின்றார்.

ஜமால் முகையதீன் சாஹிப், ஜமால் முஹம்மது சாஹிப், M.J. ஜமால் முகையதீன் சாஹிப் என இந்த மூன்று மேன்மக்களுமே தமிழ் முஸ்லிம் சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றுள்ளனர். இதில் ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிபின் பங்களிப்பு மகத்தானது. 1920-1940க்கும் இடைப்பட்ட இருபது ஆண்டுகள் கால கட்டத்தில் சென்னை மாகாணத்தின் மாபெரும் அரசியல், சமுதாயத் தலைவராக அவர் விளங்கினார். உருது முஸ்லிம்கள், தமிழ் முஸ்லிம்கள் என முஸ்லிம்கள் அனைவரையும் அரவணைத்துச் சென்றார். இவரது சீரிய செயல்பாடுகள் காரணமாக சென்னை மாகாணத்தில் முஸ்லிம்லீக் பெரும் வளர்ச்சியடைந்தது.

இஸ்லாமிய சமயப் பணிகளுக்கு வாரி வாரி வழங்கினார். முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தினார். அவரது அரசியல் நடவடிக்கைகளை உற்று நோக்கும் போது அவர் எந்தக் கட்சியுடனும் தன்னை முழுமையாக ஐக்கியப்படுத்திக் கொள்ளவில்லை. சில லட்சிய அரசியல் கருத்துகளுடன்தான் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார் என்ற சில வரலாற்று ஆசிரியர்களின் கணிப்பு சரியானதே என்று தோன்றுகிறது.

*******



ஜமால் முஹம்மது கல்லூரி நிறுவனர்

## வள்ளல் ந.மு. காஜாமியான் இராவுத்தர்

*(1880 – 1954)*

**(நன்றி : சேயன் இப்ராஹீம், முதல் தலைமுறை மனிதர்கள்)**

**1950**-க்கும் 1971-க்கும் இடைப்பட்ட காலகட்டத்தைத் தமிழக முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சிக் காலம் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. ஏனெனில் இந்தக் கால கட்டத்தில்தான் தமிழகத்தில் 10-க்கும் மேற்பட்ட முஸ்லிம் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. தமிழக முஸ்லிம் சமுதாய மக்களின் உயர் கல்வியில் நாட்டம் கொண்ட செல்வந்தர்கள் பலர் ஆங்காங்கே கல்லூரிகளைத் தொடங்கினர். இந்தக் கால கட்டத்தில்தான் திருச்சியில் ஜமால் முஹம்மது கல்லூரியும் தொடங்கப்பட்டது. இந்தக் கல்லூரியைத் தொடங்க முன்முயற்சி எடுத்தவர்கள் **M.ஜமால் முகம்மது சாஹிப்**, திருச்சி **ந.மு.காஜா மியான் இராவுத்தர்** ஆகிய இரு பெருந்தகைகளே.

காஜாமியான் இராவுத்தர் கி.பி.1880ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் பெயர் முகம்மது மியான் இராவுத்தர். இவர் எட்டயபுரத்தைச் சேர்ந்தவர். காஜாமியான் இராவுத்தரின் முன்னோர்கள் திருநெல்வேலி மாவட்டம் நாகலாபுரத்திலிருந்து 150 ஆண்டுகளுக்கு முன்னர் திருச்சியில் வந்து குடியேறினர். இவரது பாட்டனார் நல்லகனி இராவுத்தர் தோல் வணிகம் செய்து அதில் பேரும் புகழும் பெற்றிருந்தார். தந்தையார் முகம்மது மியான் இராவுத்தரும் தோல் வணிகத்தில் சிறப்புற்று விளங்கினார். பாரதியார் வீட்டிற்கு அருகில் வசித்தவர். தமிழ்மொழி பற்றாளர். தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர்.

காஜாமியான் இராவுத்தர், சென்னை கிறித்தவக் கல்லூரி உயர் தொடக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். அதற்கு மேல் பள்ளிப் படிப்பைத் தொடரமுடியாத அவர், திருச்சி திரும்பி தனது சொந்த முயற்சியினால் தமிழ், உருது, ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் பயின்றார். அரபி ஆசிரியர் மூலம் குர்ஆனையும் கற்றார். பின்னர் தனது தந்தையாருக்கு வணிகத்தில் உதவி செய்து வந்தார். மிகுந்த தொழில் நுட்ப



அறிவு கொண்டிருந்த அவர் தோல் பதனிடும் தொழிலில் பல புதுமைகளைப் புகுத்தினார்.

ஆட்டுத் தோலைப் பக்குவப்படுத்தும் போது அதில் செயற்கை வண்ணங்களைச் சேர்த்து மெருகூட்டினார். தோல் கிழிந்தாலும் இந்த வண்ணம் மாறாமல் இருக்கும் தன்மை கொண்டதாக இருந்தது. இப்படிப் பட்ட ஒரு தொழில் நுட்பத்தை இந்தியாவிலேயே முதன் முதலில் அறிமுகப் படுத்திய பெருமை இவரையே சாரும். இதன் காரணமாக இவரது தோல் நிறுவனம் இந்தியாவிலேயே மிகச் சிறந்த நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. தோல் வணிகத்தின் மூலம் அவர் பெரும் செல்வம் ஈட்டினார்.

நாட்டின் சுதந்திரப் போராட்டத்திலும் காஜாமியான் இராவுத்தர் பங்கெடுத்துக் கொண்டார். காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளராக இருந்த அவர், அக்கட்சி நடத்திய இயக்கங்களுக்கு நிதி உதவியும், ஆதரவும் அளித்து வந்தார். அந்நிய நாட்டுத் துணிகளை, குறிப்பாக இங்கிலாந்து நாட்டுத் துணிகளைப் புறக்கணிக்க வேண்டும். சுதேசித் துணிகளையே அணிய வேண்டும் என்று மகாத்மா காந்திஜி அறைகூவல் விடுத்த போது, காஜாமியான் இராவுத்தர் 50,000 ரூபாய் முதலீடு செய்து கதர்த்துணிகளை உற்பத்தி செய்யும் ஆலை ஒன்றை திருச்சியில் தொடங்கினார். ஆனால் இத் தொழிலில் அவருக்குப் பெருத்த நட்டம் ஏற்பட்டது. தான் முதலீடு செய்திருந்த 50 ஆயிரம் ரூபாயையும் இழந்திடும் நிலை அவருக்கு ஏற்பட்டது. எனினும் மனந்தளராது தொடர்ந்து நாட்டுப் பணி ஆற்றி வந்தார். சுதந்திரப் போராட்ட வீரர்கள் பலருக்கும் உதவி செய்தார். திருச்சியில் தொடங்கப்பட்ட சேஷாயி மின் உற்பத்திக் கம்பெனியில் ரூ.50 ஆயிரத்திற்குப் பங்குகள் வாங்கினார்.

திருச்சி மாவட்டத்தில், கிலாபத் இயக்கம் 1920-21-ல் மிகத் தீவிரமாக இருந்தது. T.S.S. இராஜன் இந்த இயக்கத்தை முன்னின்று நடத்தினார். 17.8.1920 அன்று காந்திஜியும், மௌலானா சௌகத் அலியும் கிலாபத் மற்றும் ஒத்துழையாமை இயக்கப் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொல்வதற்காக திருச்சிக்கு வருகைதந்தனர். இந்தக் கூட்டம் சிறப்பான முறையில் நடைபெற துணை நின்றவர்களில் காஜாமியான் இராவுத்தரும்

ஒருவர். T.S.S. இராஜன், ஜமால் முகம்மது சாஹிப், ஸையத் முர்த்துஸா ஹழரத், P. கலிபுல்லா ஆகியோருடன் இணைந்து கிலாபத் இயக்கத்தை முன்னின்று நடத்தினார்.

ஆங்கில வழியில் பாடங்களைக் கற்பிக்கும் பள்ளிகள், கல்லூரிகளிலிருந்து வெளியேறி தமிழ் வழியில் கல்வி கற்பிக்கும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேர வேண்டுமென்று கிலாபத் இயக்கத்தினர் மாணவர்களைக் கேட்டுக் கொண்டனர். 19.8.1920 அன்று காஜாமியான் உள்ளிட்ட தலைவர்கள் திரளான தொண்டர்களுடன் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி முன்பு கூடி அங்கு பயின்று கொண்டிருந்த மாணவர்களை அக்கல்லூரியை விட்டு வெளியேறி புதிதாகத் தொடங்கப்பட்டிருந்த தேசிய பள்ளியிலும், கல்லூரியிலும் சேரவேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். திருச்சி மாவட்டத்தில் கிலாபத் இயக்கத்தைத் தொடர்ந்து முன்னின்று நடத்திய பெருமை காஜாமியான் இராவுத்தரையும், ஜமால் முஹம்மது சாஹிபையும் சாரும்.

இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் ஒன்று கூடி கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதற்காகவும், பாமர முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துச் சொல்வதற்காகவும் திருச்சியில் மஜ்லிஸீல் உலமா என்ற அமைப்பினை இவர் நிறுவினார். இந்த நிறுவனம் செயல்படுவதற்காக காஜா மலைக்கு வடக்கில் ரேஸ் கோர்ஸ் அருகில் இருந்த தனக்குச் சொந்தமான 124 ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்கினார்.

1914ஆம் ஆண்டு அப்போதைய சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜனாப் அப்துல் ரஹீம் சாஹிப் தலைமையில் இந்த சபையின் தொடக்க விழா சிறப்பான முறையில் நடைபெற்றது. வள்ளல் ஜமால் முஹம்மது சாஹிப், காஜாமியான் இராவுத்தரின் செயல்பாடுகளுக்குப் பெரிதும் துணை புரிந்தார். இவர் வழங்கிய நிலத்தில், ஜமால் முஹம்மது சாஹிப் மஜ்லிஸீல் உலமா செயல்படுவதற்குக் கட்டிடம் கட்டிக் கொடுத்தார். இந்தச் சபை குறிப்பிட்ட சில மார்க்க அறிஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் போக்குவரத்துச் செலவும், படியும் வழங்கி தமிழகத்திலுள்ள பல்வேறு ஊர்களுக்கும் அவர்களை அனுப்பி மார்க்கப் பரப்புரை மேற்கொள்ள



ஏற்பாடுகள் செய்தது. ஒரு அநாதை நிலையமும் தொடங்கப்பட்டு திக்கற்ற குழந்தைகள் அதில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் வழங்கப்பட்டன. இந்த சபை உயர் துவக்கப் பள்ளி ஒன்றையும் தொடங்கியது. அந்தப் பள்ளிதான் தற்போது தரம் உயர்ந்து காஜாமியான் மேல்நிலைப் பள்ளியாக சிறப்பான முறையில் செயல்பட்டு கல்விப் பணியாற்றி வருகின்றது.

திருச்சி என்றதும், தமிழக முஸ்லிம்களின் நினைவுக்கு வருவது ஜமால் முஹம்மது கல்லூரியாகும். **'தென்னகத்தின் அலிகர்'** எனப்போற்றப்படும் இந்தக் கல்லூரி தமிழக முஸ்லிம்களின் கல்வி, கலாச்சாரம், பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றது.

தமிழக முஸ்லிம்கள் உயர்கல்வியில் மிகவும் பின் தங்கியிருந்தனர். 1921ஆம் ஆண்டு வாணியம்பாடி முஸ்லிம் கல்விச் சங்கத்தினரால் வாணியம்பாடியில் **'இஸ்லாமியக் கல்லூரி'** தொடங்கப்பட்டது. அதன் பின்னர் 1950ஆம் ஆண்டுவரை வேறு முஸ்லிம் கல்லூரி எதுவும் தமிழகத்தில் தொடங்கப்படவில்லை. உயர்கல்வி பெறுவதன் மூலமே முஸ்லிம்கள் அரசுத் துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெறமுடியும். ஆட்சியதிகாரத்தில் பங்கு பெற முடியும் என்பதை உணர்ந்து கொண்ட முஸ்லிம் கல்வியாளர்கள், செல்வந்தர்கள் இச்செயலில் இறங்கினர். இந்நிலையில் பீடித் தொழில் ஒன்றையே பிரதானத் தொழிலாகக் கொண்டிருந்த திருச்சி வாழ் முஸ்லிம்கள் உயர் கல்வி பெற கல்லூரி ஒன்று தேவை என்பதை சமுதாயத் தலைவர்கள் உணர்ந்தனர். இத்தேவையினை நிறைவேற்ற வள்ளல் காஜாமியான் இராவுத்தரும், வள்ளல் ஜமால் முஹம்மது சாஹிபும் முன் வந்தனர்.

முன்னவர் கல்லூரிக்காக தனக்குச் சொந்தமான 124 ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்க, பின்னவர் அந்த இடத்தில் கல்லூரிக் கட்டிடங்கள் கட்டித்தர முன்வந்தார். இரு பெருந்தகையாளர்களும் செயலில் இறங்கினர். அதன் விளைவாக ஜமால் முஹம்மது கல்லூரி உருவானது. இக்கல்லூரி 11.7.1951 அன்று அப்போதைய சென்னை மாகாண

முதலமைச்சர் பி.எஸ்.குமாரசாமி ராஜா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அப்போதைய சென்னை மாகாண கவர்னராக இருந்த பவநகர் மகாராஜா தொடக்க விழாவிற்கு தலைமை தாங்கினார்.

இந்தக் கல்லூரியின் நிர்வாகக் குழுத் தலைவராக வள்ளல் காஜாமியான் இராவுத்தர் 1951முதல் 1954 ஆம் ஆண்டு வரை (இறக்கும் வரை) பொறுப்பு வகித்தார். வள்ளல் ஜமால் முஹம்மது சாஹிபின் புதல்வர் M.J.ஜமால் முஹைதீன் சாஹிப் 1951ஆம் ஆண்டு முதல் 1966ஆம் ஆண்டு வரை செயலாளராகப் பணியாற்றினார். 1954 முதல் 1975 வரை கல்லூரியின் ஆட்சிமன்றக்குழு தலைவராகவும் செயல்பட்டார். காஜாமியான் இராவுத்தரின் நினைவைப் போற்றும் வண்ணம் 1960ஆம் ஆண்டு இக்கல்லூரியின் முதன்மை விடுதிக்கு அவரது பெயர் சூட்டப்பட்டு, **'காஜாமியான் ஹாஸ்டல்'** என அழைக்கப்பட்டு வருகின்றது. இந்த விடுதியில் மட்டும் 1800 மாணவர்கள் தங்கிப் பயின்று வருகின்றனர்.

1951ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரி, கடந்த 67 ஆண்டுகளாக மாபெரும் கல்விப் பணியாற்றி வருகின்றது. 13 பட்டப்படிப்புகளும், 14 பட்டமேற்படிப்புகளும், 16 இளநிலை ஆராய்ச்சி படிப்புகளும், 15 உயர்நிலை ஆராய்ச்சி படிப்புகளும் உள்ள இந்தக் கல்லூரியில் 350-க்கும் மேற்பட்ட பேராசிரியர்களும், 150க்கும் மேற்பட்ட ஆசிரியரல்லாத பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மாணவர்களின் எண்ணிக்கையோ 12ஆயிரத்துக்கும் மேல். இக் கல்லூரியில் பயின்ற பலர் உலகின் பல நாடுகளிலும், பல துறைகளிலும் சிறப்பாகப் பணியாற்றி வெற்றிக் கொடி நாட்டி வருகின்றனர்.

காஜாமியான் இராவுத்தர் சிறந்த மார்க்கப் பற்றுடையவராகத் திகழ்ந்தார். இஸ்லாமிய ஞான இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த அவர், மஸ்தான் சாஹிப் பாடல்கள், கல்வத்து நாயகம் இயற்றிய உலூமுதீன், தக்கலை பீரப்பாவின் பாடல்கள், இமாம் கஸ்ஸாலியின் நூல்கள், சூபி ஞான இலக்கியங்கள் ஆகியவற்றை விரும்பிப் படிப்பார். மார்க்க விஷயங்கள் பற்றி முஸ்லிம் மார்க்க அறிஞர்களுடன் உரையாடுவதில் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தார்.



அல்லாமா ஆ.கா.அப்துல் ஹமீது பாக்கவி அவர்கள் திருக்குர்ஆனைத் தமிழில் மொழி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது வள்ளல் காஜாமியான் இராவுத்தர் அவரது முயற்சிகளுக்குப் பெரிதும் துணை நின்றார். திருக்குர்ஆனின் தமிழ் மொழி பெயர்ப்புப் பிரதியையும், பிற இஸ்லாமிய நூல்களையும் வெளியிட திருச்சியில் **'இஸ்லாமிய நூல் பிரசுர சங்கம்'** என்ற பதிப்பகம் நிறுவப்பட்டது. இந்தப் பதிப்பகத்திற்கு வள்ளல் காஜாமியான் இராவுத்தரும், வள்ளல் ஜமால் முஹம்மது சாஹிபும் நிதி உதவி செய்தனர். (காரைக்கால் தம்பி மரைக்காயரும் உதவி செய்தவர்களில் ஒருவர்) இந்தப் பதிப்பகம்தான் அல்லாமா அப்துல் ஹமீது பாகவியின் குர்ஆன் தர்ஜீமாவின் முதல் பாகத்தை 1929ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டது. மேலும் அல்லாமாவின் **'இயற்கை மதம்'** என்ற நூலையும் இந்தப் பதிப்பகம் வெளியிட்டது. இது போன்ற எண்ணற்ற சமயப் பணிகளுக்கு காஜாமியான் இராவுத்தர் உதவியுள்ளார்.

வள்ளல் காஜாமியான் இராவுத்தர் மிகச் சிறந்த சித்தா யூனானி வைத்தியராகத் திகழ்ந்தார். தம்மை நாடிவந்த ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகவே சிகிச்சையும், மருந்துகளும் வழங்கினார். சித்தா, யூனானி மருந்துகளைத் தாமே தயார் செய்து வந்தார்.

மிகப் பெரிய செல்வந்தராக விளங்கிய போதிலும், அவர் எளிமையாகவே இருந்தார். ஆடம்பரத்தை அறவே வெறுத்தார். தனது இல்லத் திருமண நிகழ்ச்சிகளையும், பிற நிகழ்ச்சிகளையும் ஆடம்பரமின்றியும், ஆரவாரமின்றியும் நடத்தினார். தனது பிள்ளைகளின் திருமணத்திற்கு அழைப்பிதழ்கள் கூட அச்சடித்து வழங்கவில்லை. திருமணத்திற்கென ஒதுக்கியிருந்த தொகையில் அவசியத் தேவையான செலவுகளை மட்டுமே செய்து விட்டு, மீதமிருக்கும் தொகையைப் பள்ளிவாசல்களுக்கோ, மதரஸாக்களுக்கோ, அநாதை நிலையங்களுக்கோ கொடுத்து விடுவார். தான் வாழ்ந்து வந்த பாலக்கரை பரிமள சுன்னத் ஜமாஅத்திலும் முக்கியப் பொறுப்புகள் வகித்தார்.

வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளல் காஜாமியான் இராவுத்தர் தனது 73வது வயதில் 14.11.1954இல் காலமானார். அவரின்

வாரிசுகள் ஜமால் முஹம்மது கல்லூரியின் ஆட்சி மன்றக்குழுவில் முக்கியப் பொறுப்புகளில் இருந்து வருகின்றனர். தற்போது அவரது பேரனார் டாக்டர் A.K.காஜா நஜீமுத்தீன் சாஹிப் கல்லூரியின் செயலாளரும், தாளாளராகவும், இன்னொரு பேரனார் K.A. கலீல் அஹமது சாஹிப் கல்லூரியின் பொருளாளராகவும், பொறுப்பு வகித்து வருகின்றனர். பொருளாளர் கலீல் அஹமது சாஹிபின் மகன் K.அப்துல் சமது மேலாண்மைத்துறை **(M.B.A.)** இயக்குநராக பொறுப்பு வகிக்கிறார். செயலர் & தாளாளர் டாக்டர் A.K. காஜாநஜீமுத்தீன் சாஹிபின் மூத்தமகன் K.N. அப்துல் காதர் நிஹால், கல்லூரி சுயநிதிப் பிரிவின் இயக்குநராகவும், இளையமகன் K.N. முகம்மது பாசில் கல்லூரி விடுதியின் இயக்குனராகவும் செயலாற்றி கொண்டிருக்கிறார்கள்.

வள்ளல் காஜாமியான் இராவுத்தர் அனைத்து நற்பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தார். நுண்ணறிவு மிக்கவராய், தொழில் நுட்ப வல்லுநராய், தேசபக்தராய், சமூகத் தொண்டராய், சிறந்த கல்வியாளராய், கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரராய், சமுதாயப் புரவலராய், நல்ல முஸ்லிமாய், நல்ல மனிதராய் வாழ்ந்த பெருந்தகையாளர் அவர். எல்லாவற்றிற்கும் மேலாக விடுதலை போராட்ட வீரராக திகழ்ந்தவர். காந்தியடிகள் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கு கொண்டவர்.

வள்ளல் ஜமால் முஹம்மது சாஹிபுடன் இணைந்து அவர் ஆற்றிய பணிகள் என்றும் நினைவுகூறத்தக்கன. இந்த இருவர் கூட்டணி திருச்சிக்கு மட்டுமின்றி ஒட்டு மொத்த தமிழ் முஸ்லிம் சமூகத்திற்கே பெருமை சேர்க்கும் வண்ணம் செயல்பட்டது. ‘கல்விக்காகக் கொடுப்பவன் ஒரு போதும் மரணமடைவதில்லை’ என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். கல்விக்காக வாரி வழங்கிய காஜாமியான் இராவுத்தர் மறைந்தாலும், அவரது புகழ் மறையாமல் என்றும் நிலை பெற்றிருக்கும்.

*****



“திருச்சி கண்ட சீதக்காதி”

## வள்ளல் ந.மு. காஜாமியான் இராவுத்தர்

(நன்றி : ஹாஜி. இஸ்மாயீல் நசீருத்தீன்)

1954-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ஆம் தேதியன்று திருச்சி நகர் முழுவதும் மாபெரும் துக்கத்தில் ஆழ்ந்தது. ஹிந்து, முஸ்லிம், கிருஸ்துவ மக்கள் அனைவருடைய முகங்களும் சோர்ந்து போய்விட்டன. ஏழை-பணக்காரர், ஆண்-பெண் என்ற வித்யாசமில்லாமல் எல்லோருடைய கண்களும் கலங்கி நின்றன. வியாபாரங்கள், தொழில்கள், வேலைகள் யாவும் ஆங்காங்கும் நிறுத்தப்பட்டன. உரத்துப் பேச வலுவின்றி, மக்கள் மெதுவாக ஒருவருக்கொருவர் செய்தியைச் சொல்லி, தங்கள்துக்கங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

வெளியூர்களிலிருந்து, ரயிலிலும், பஸ்ஸிலும், கார்களிலும் லட்சக்கணக்கான மக்கள் திருச்சிக்கு வந்து குவிந்து கொண்டிருந்தனர். பரபரப்பாக பாலக்கரையை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். தமிழ் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள வர்த்தகர்கள், பிரமுகர்கள், ஆலிம் உலமாக்கள், அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், தேச பக்தர்கள், பல மத பெரியார்கள், ஏழைகள், பணக்காரர்கள் ஆகியோரெல்லாம், பாலக்கரையில் கடலெனத் திரண்டு கொண்டிருந்தனர். ஒவ்வொருவரின் கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. ஒவ்வொருவர் முகத்திலும் துக்கத்தின் சாயல் படிந்திருந்தது.

* வர்த்தக உலகின் மன்னர் போய்விட்டாரே! என்று கலங்கினார் வியாபாரிகள்.
* மனித சமுதாயத்தின் மாணிக்கம் போய்விட்டதே! என புலம்பினர் பிரமுகர்கள்
* ஆலிம் - உலமாக்களின் ஆதரவாளர்கள் கண் மூடிவிட்டாரே! எனக் கதறினர் மார்க்கப் பெரியார்கள்!
* அறிவின் சிகரத்தைப் பறிகொடுத்து விட்டோமே! எனப் பரிதவித்தனர், அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் அனைவரும்.
* நாட்டுப்பற்று மிக்க நற்பெரியாரை இழந்தோமே! எனத் துடித்தனர் தேசபக்தர்கள்.

*****

# வாஞ்சையான வள்ளல்களின் வாழ்க்கைக் குறிப்புகளில் சில...

| | ஹாஜி. M. ஜமால் முகம்மது சாஹிப் | கான் சாகிபு N.M. காஜாமியான் இராவுத்தர் |
|---|---|---|
| பிறப்பு : | பிப்ரவரி – 1881 சென்னை | 1880 - திருச்சிராப்பள்ளி |
| இறப்பு : | 07.11.1949 (67 வயது) | 1954 – (73 வயது) |
| கல்வித் தகுதி : | 5 ஆம் படிவம் (10 ஆம் வகுப்பு) சென்னை கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளி | 5 ஆம் வகுப்பு சென்னை கிறித்துவக் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி |
| பெற்றோர் : | ஜமால் முஹைதீன் - கிளுரு பீவி | ந.முகம்மது மிய்யான் ராவுத்தர் S/o. நல்லகனி இராவுத்தர் |
| பூர்வீகம் : | வேம்பகுடி (இராமநாதபுரம்) | எட்டயபுரம் |
| தொழில் அறிவு : | 15 வயதிலிருந்து . . . தோல் வணிகம் | இளம் வயதிலேயே . . . |
| உற்பத்தி, பதவிகள் : | சென்னை வர்த்தக சங்கத்தின் **தலைவர்**, ஜமால் மொய்தீன் அன் கோ என்ற நிறுவனத்தை நடத்தி தோல் ஏற்றுமதி வணிகம் செய்தவர். 50% சதவீதம் ஏற்றுமதி இவர் நிறுவனம் மூலம் லண்டன் மற்றும் ஐரோப்பா நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. தென்னிந்தியவர்த்தகச் சங்கத்தின் **தலைவர்**, இந்திய வர்த்தகத் தொழில் | இந்தியாவிலேயே குரோம் தோல் வண்ணம் உற்பத்தியில் ஏற்றுமதியில் முதன்மையாக விளங்கியவர், அது உலகத்தரம் வாய்ந்ததாக லண்டனில் விற்பனை செய்யப்பட்டது. தோல் பதனிடுவதில் ஜெர்மன் இயந்திரங்கள் போன்று கண்டுபிடித்துத் தொழிலை நவீன மயமாக்கியவர். பொறியியல் மாணவர்களே வியந்த தொழில் |

24

| | ஹாஜி. M. ஜமால் முகம்மது சாஹிப் | கான் சாகிபு N.M. காஜாமியான் இராவுத்தர் |
|---|---|---|
| | கழகங்களின் கூட்டமைப்பின் **தலைவர்**, லண்டனில் நடைபெற்ற 2-வது வட்ட மேஜை மாநாட்டிற்கு நம் நாட்டின் **வர்த்தக தலைவராக** சென்றவர் (உடன் ஜி.டி.பிர்லா சென்றுள்ளார்), தென்னிந்திய முஸ்லிம் சங்கத்தின் தலைவர், சென்னைப்பல்கலைக்கழக பொருளாதார மற்றும் வணிக இயல் கல்விக்குழு உறுப்பினர். வணிக நுட்பத்தால் அன்றைய துருக்கிப் பிரதமர் முகமது ஷௌகத்கான் பாராட்டினார். தம் நாட்டு மந்திரியாக ஆக்க அழைத்தரர். ஜெர்மன் பிரதமர் வான் பெத்மின் ஹால் வெக் வியந்தார். இங்கிலாந்து அமைச்சர்கள், அரசியல்வாதிகள் ஆலோசனைக்கு அழைத்தனர். ரஷ்யா, நீங்கலாக அனைத்து நாடுகளுக்கும் சென்றவர். | நுட்பங்களை-பொறியியல் எந்திரங்களைக் கண்டுபிடித்தவர். தோல் ஏற்றுமதி செய்தால் பணம் தாமதமாக வருவதற்கு வருந்திய உற்பத்தியாளர் -களுக்கு வங்கியில் இருந்து 75% முன் பணமாகப் பெற அன்றைய வர்த்தக மந்திரி சர்.ஏ.ராமசாமி முதலியாரிடம் ஒரு குழுவினை அனுப்பிப் பெற்றுத் தந்த பெருமைக்குரியவர்.1200 ஏக்கர் நிலத்தில் - ஓலையூரில் நாட்டுச்சக்கரை உற்பத்தி செய்தவர் - சித்த வைத்தியம், யூனானி வைத்திய முறைகளை அறிந்தவர். தமிழ், ஆங்கிலம், உருது, அரபு மொழிகள் அறிந்தவர்.தம்பி எஜமான் என்றே திருச்சி மக்களால் அழைக்கப்பட்டவர் - அறியப்பட்டவர். |
| தேசப்பணித் தொண்டு : | இந்திய விடுதலைக்கு காந்திஜி நிதி திரட்டிய போது நிரப்பப்படாத காசோலை வழங்கி, அன்னாரால் பாராட்டப்பட்டவர், பிரிட்டிசார் நாணய மாற்றம் செய்த போது எதிர்ப்புத் தெரிவித்து லண்டன் நிதிப் பொறுப்பாளர் சர். ஜார்ஜ் ஷர்ஸ்டரிடம் விவாதித்துப் போராடியவர்.இந்து, முஸ்லிம் கலவரம் ஏற்பட இருந்த நேரத்தில் ஒற்றுமைக்காக காந்திஜி–ஆகாகான் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்தவர். | விடுதலைப் போராட்ட வீரர்கள் கதர் ஆடை அணிவதற்கு ரூ.50,000 செலவில் கதர் ஆலை ஒன்றை நிறுவியவர். 1937-38இல் திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தந்தை பெரியார் - கி. ஆ.பெ.விசுவநாதம் பிள்ளை இருவர் கைகளையும் பற்றியவராக ஊர்வலம் சென்றவர். அன்னார் தம் துணைவியாரே நாலு ரூபாய், மூன்று ரூபாய் என நிதி திரட்டி வழங்க ஆதரித்தவர்கள். 1928ல் கரூரில் நைந்து |

25

| | ஹாஜி. M. ஜமால் முகம்மது சாஹிப் | கான் சாகிபு N.M. காஜாமியான் இராவுத்தர் |
|---|---|---|
| | | போன நெசவுத் தொழிலாளர்களை அழைத்து வந்து கல்லூரி அருகில்-(டோல்கேட் அருகில்) "கைக்கோளர் காலனி" அமைத்து ஆதரித்தவர். SMESCL என்ற பெயரில் ஏ.சேஷாயி தொடங்கிய போது (South Madras Electric Supply Corporation Ltd.) பெரும் பங்குகளை வாங்கி உதவியவர். அந்நிறுவனம் கடன்பட்ட பொழுதும் நெருக்கடிக்கு உள்ளான போதும் நிதியுதவி அளித்தவர். |
| மார்க்க சேவை | டெல்லி ஜாமியா மில்லியா பல்கலைக்கழகம் நிதிப்பற்றாக் குறையில் சிக்கித் தவித்த போது தன் பணம் 1,00,000 ரூபாய் அளித்ததோடு, நிதித்திரட்டியும் பெரும் தொகையை – அன்றைய துணைவேந்தரும் பின்னாள் ஜனாதிபதியாகவும் திகழ்ந்த Dr. ஜாகிர் உசேன் இவர் இல்லத்தில் தங்கி பெற்றுச் சென்றார்.துருக்கி செம்பிறை குழுவிற்கு – சமர்ணா (Symrna) நிதியாக வழக்கம் போல் நிரப்பப்படாத காசோலை வழங்க வாங்குவோர் மறுக்கவே, 1 லட்சம் ரூபாய் எழுதிக் கொடுத்தவர். தன்னால் சென்னையில் நிறுவப்பட்ட ஜமாலியா மதரஸாவிற்கு மகாகவி இக்பால், சையத் சுலைமான், இங்கிலாந்து நாட்டின் தூக்பிக்தாஸ் போன்ற உயர்ந்த மார்க்க அறிஞர்களை அழைத்து மார்க்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி நூலாக வெளியிட்டவர். மதரஸாவில் பாடத்திட்டங்களை புதுப்பிக்கவும், ஆங்கிலம் மற்றும் நவீன கல்வி அறிவுப் பாடங்களை இணைக்கவும் ஆலோசனைகள் மேற்கொண்டு செயல்படுத்தியவர். | திருச்சியில் மஜ்லிசுல் உலமா, அனாதை ஆசிரமம், ஆரம்பப்பள்ளி, மதரஸாயே முகம்மதியா (பாலக்கரை) போன்றவற்றை துவக்கினார். முதன் முதலில் திருக்குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்புப் பணியை மரியாதைக்குரிய அறிஞர் ஆ.கா.அப்துல் ஹமீது பாகவி அவர்களைக் கொண்டு துவக்கினார். அவருக்கு பாலக்கரையில் வீடு உள்பட அனைத்து வசதி -களையும் ஏற்படுத்திக் கொடுத்தார். அன்னாருக்கு S.S.அப்துல் காதர் பாகவியையும் உறுதுணை - யாக செயல்பட வைத்தார். இதற்கான அச்சகம் 1926-இல் இஸ்லாமிய நூற் பிரசுர சங்கம் என்ற பெயரில் நிறுவப்பட்டது. 1914-ல் மஜ்லிசுல் உலமா நிறுவ 124 ஏக்கர் நிலத்தை வழங்கியவர். |



| | ஹாஜி. M. ஜமால் முகம்மது சாஹிப் | கான் சாகிபு N.M.காஜாமியான் இராவுத்தர் |
|---|---|---|
| இல்ல விழா வழக்கங்களும், பண்பு நலனும் : | அவசியமற்ற சடங்குகளை ஏற்கவில்லை. தமது திருமணங்களில் எளிமையையே கண்டிப்பாக கடைபிடித்தார். ஆடம்பரங்களைத் தவிர்த்தார். தாமே ஒரு லுங்கி, வெள்ளைச் சட்டை, தொப்பி சகிதமாகவே இருந்தார் - வெளிநாடு செல்லும் பொழுது கறுப்பு வண்ண பேண்ட் அணிந்து கொள்வார். இதனைக் கண்டு வியந்த கவிஞர் அல்லாமா இக்பால் அவர்கள், "எளிமையான உடையில் காணப்படுகிறார். கோடிக்கணக்கில் வணிகம் புரிகிறார். அதோடு கடினமான தத்துவப் பிரச்சினைகளைப் பற்றியும் அவரால் விவாதிக்க முடிகிறது" என்றும் "PLAIN LIVING; HIGH THINKING" என்றும் பாராட்டினார். வள்ளல், வணிக மேதை, அரசியல் அறிஞர், பொருளியல் நிபுணர், கல்வி வளர்த்த செம்மல், செல்வச் சீமான், கல்வியாளர் தேசிய நிறுவனங்களுக்குப் பக்க பலனாகத் திகழ்ந்தவர் - சுதந்திரப் போராட்ட வீரர் - கொடையாளர். | திருமணங்களில் எளிமை, பத்திரிக்கை இன்மை, ஆடம்பரம் இன்மை போன்றவை கடைபிக்கப்பட்டது. பிறரிடமும் இதனை வற்புறுத்தினார். திருமணத்திற்கு ஆகும் செலவுத் தொகையை - ஏழைக்குமர் ஒன்றின் திருமணத்திற்கு கொடுத்த பின்னர் அல்லது அனாதை ஆசிரமத்திற்கு வழங்கிய பின்னரே தம் இல்லத் திருமணம் நடக்கும். காது குத்து, விருத்த சேதனம் போன்றவற்றிற்கு விழாக்கள் எடுப்பதில்லை. அதனைக் கண்டிக்கவும் செய்தார். தம்பி எஜமான், வள்ளல், வணிகர், முதலாளி, தோல் தொழில் அறிஞர், தேச பக்தர், சமுதாயத் தொண்டர், தலைவர், தமிழ் மொழிப் போராளி, தன்னிகரில்லா மார்க்க சேவை புரிந்தவர், சுதந்திரப் போராட்ட வீரர் - கொடையாளர். |




*In the city itself he was entertained in several parties*





*"Opening the Swadeshi Exhibition in Madras during Christmas week in 1935"*



M.J. ஜமால் மொய்தீன் N.M. காஜா மியான் இராவுத்தர் Prof. அப்துல் ஹக் Prof. சையது சாகிப் N.M.K. அப்துல் சமது





1951 -ஆம் ஆண்டு கல்லூரித் துவக்க விழா புகைப்படம். அன்றைய மகா ராணி,
கவர்னர் மற்றும் கல்லூரி நிறுவனர்கள்



1928-ல் சென்னை வந்த உலகமகாகவி. சர். அல்லாமா இக்பால் அவர்களுடன்



1930-ல் சென்னை வந்த மௌலானா ஷவ்கத் அலியை வரவேற்று ஜமாலியா வரும் போது